ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2322/56 - 2023 මාර්තු මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.03.09

2322/56 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் குண்டசாலை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

குண்டசாலை பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், குண்டசாலை பிரதேச சபையின் இலக்கம் 21 - தெகல்தொருவ வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சமரவிக்கிரம ஜயவர்தனகே சன்தன ஹேமன்த குமார என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான குண்டசாலை பிரதேச சபையின் இலக்கம் 21 - தெகல்தொருவ வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக உடுவரகே தொன் தர்மசிங்ஹ என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

குண்டசாலை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான ஹேவாகே தனுஷ்க நலீன் சம்பத் பிரநாந்து ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு உடுவரகே தொன் தர்மசிங்ஹ என்பவர் குண்டசாலை பிரதேச சபையின் இலக்கம் 21 - தெகல்தொருவ வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கலாநிதி எச். டீ. என். சம்பத் பிரநாந்து,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
குண்டசாலை பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கண்டி,
*2023, மாச்சு 08.*

EOG *03 - 0116*

1A - G 39073 — 16 (2023/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*